# மாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் – III

**இடம்** : வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடம்.

காலம் :- 24.07.2015 காலை 9.30 மணி

சமுகமளித்தோர்:-

- கௌரவ கல்வி அமைச்சர், வட மாகாணம்.
- செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்(நிர்வாகம்,கல்வி அபிவிருத்தி, பொதுநிர்வாகம்) மாகாணக் கல்வித் திணைக்களம்.
- உதவிச் செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பிரதம கணக்காளர், மாகாணக் கல்வித் திணைக்களம்.
- வலயக் கல்விப் பணிப்பாளர்கள்(யாழ்ப்பாணம், வலிகாமம்,வடமராட்சி,தென்மராட்சி, தீவகம், முல்லைத்தீவு,துணுக்காய், வவுனியா வடக்கு, மன்னார், மடு)
- பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பொறியியலாளர், பாடசாலை வேலைகள் பிரிவு, கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்,வலிகாமம்,வடமராட்சி,தென்மராட்சி, தீவகம், வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, கிளிநொச்சி,முல்லைத்தீவு, துணுக்காய், மன்னார், மடு)
- கணக்காளர்கள்(கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி,தீவகம்,துணுக்காய்,வவுனியா தெற்கு,மன்னார், மடு)
- உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் (மாகாணக் கல்வி அமைச்சு,மாகாணக் கல்வித் திணைக்களம், மடு)
- நிர்வாக உத்தியோகத்தர்கள் (மாகாணக் கல்வி அமைச்சு,மாகாணக் கல்வித் திணைக்களம)
- பாடசாலை வேலைகள் பரிசோதகர்கள்
- தொழிநுட்ப உத்தியோகத்தர்கள்
- ஆசிரிய வளவாளர்கள், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- மாகாண உதவி முகாமையாளர் (ஆலோசனையும் வழிகாட்டலும்) மா.க.திணைக்களம்.
- நிதி உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம்,கிளிநொச்சி.

செயலாளர், கல்வி அமைச்சு அவர்கள் உரையாற்றும் பொழுது மூன்றாவது மாகாண மட்டத்திலான கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் இன்று நடைபெறுகின்றது. இக் கூட்டத்திற்கு வருகை தந்த கௌரவ கல்வி அமைச்சர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை வேலைகள் பிரிவு பொறியியலாளர்கள், கணக்காளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், தொழிநுட்ப

உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றுக்கொண்டு கூட்டத்தினை ஆரம்பித்து வைத்தார். சென்ற இரண்டாவது மாகாண மட்டத்திலான கல்வி அபிவிருத்திக் கூட்டமானது 05.06.2015 அன்று நடைபெற்றது. அது தொடர்பான கூட்ட அறிக்கை அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அதனை வாசித்து திருத்தங்கள் இருந்தால் மேற்கொண்டு அதனை ஆமோதித்து வழி மொழியப்படவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

குறிப்பாக இன்றைய கூட்டத்தில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களிற்கு முக்கிய முன்னுரிமை கொடுக்க வேண்டிய தேவை உள்ளது. வேலை தொடர்பான சகல விடயங்களையும் உள்ளடக்கிய அறிக்கை ஒன்று உங்களுக்கு தரப்பட்டுள்ளது. குறிப்பாக மொத்தமாக இந்த வருடம் செய்யவேண்டிய வேலைகளின் தொகைகளையும் அதற்குரிய மொத்த ஒதுக்கீடுகளும் (Allocation) காட்டப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு ரூபா 1335.37 Mn பெறுமதியான 1083 வேலைகள் செய்து முடிக்கப்பட வேண்டும். அதில் ரூபா 76.83 Mn செலவினம் ஏற்பட்டுள்ளது. இந்த வருடத்தில் ஏழு மாதங்கள் முடிவடைந்துவிட்டது. இன்னும் ஐந்து மாதங்களே இருக்கின்றது. ஆகவே இந்த ஐந்து மாதங்களில் மீதமாகவுள்ள வேலைகளை செய்து முடிப்பதென்பது மிகக் கடினமானதொரு நிலை. எனவே மிகக் கவனமாக மேற்பார்வை செய்தால் தான் நாம் விரைவாக வேலைகளை முடிக்க முடியும். உங்களிற்கிடையில் ஒத்துழைப்பு மிக குறைவாக இருப்பதனை காணக்கூடியதாக உள்ளது. சில தரவுகளை கேட்கும் பொழுது அதனைப் பெற்றுக்கொள்வது மிகக் கடினமாக உள்ளது. சில இடங்களிலிருந்து வேலை முடிவடைந்துவிட்டது கொடுப்பனவு கிடைக்கவில்லையென கூறுகின்றார்கள். ஆனால் நிதியினைப் பொறுத்தவரையில் தேவையான நிதி எங்களிடம் உள்ளது. அதனை சரியான முறையில் எடுத்து கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு எமக்கிடையில் ஒத்துழைப்பு இல்லை. அதனை உடனடியாக சீர்செய்யப்பட வேண்டும். 2016 ஆம் ஆண்டிற்குரிய பாதீடு (Budget) வட மாகாணசபையில் சமர்ப்பித்தல் வேண்டும். 2016 ஆம் ஆண்டிற்குரிய பாதீடு (Budget) சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் இந்த வருடத்திற்குரிய ஒதுக்கீடுகள், செலவு விடயங்களை பாதீட்டினுள் முழுமையாக காட்டப்பட வேண்டும். எங்களுடைய முன்னேற்ற அறிக்கையை காட்டிதான் 2016 இற்குரிய பாதீடு (Budget) சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆகவே பொறுப்பாக இருப்பவர்கள் இதனை மேற்பார்வை செய்து மிகுதியாகவுள்ள ஐந்து மாதத்தினுள்ளும் துரிதமாக வேலைகளை முடிப்பதற்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் அதற்குரிய முன்னேற்ற அறிக்கையை உடனுக்குடன் தரவேற்றம் செய்வதற்கும் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அடுத்து முன்னேற்றங்கள் தொடர்பான முன்னளிக்கைகள் (Presentation) செய்யப்பட்டது. முன்னளிக்கையில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

- ☞ PSDG தொடர்பாக ஆராயப்பட்டது. அதில் 43 வேலைகளிற்கு 278Mn ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

- ☞ பிராந்திய சம அபிவிருத்தி (Balance Regional Development) திட்டத்தின் கீழ் 40 முன்பள்ளி அபிவிருத்திக்கென 20Mn ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- ☞ TSEP திட்டம் தொடர்பாக ஆராயப்பட்டது. அதில் 275 வேலைகள் உள்ளதாகவும் 372 Mn ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் 271.25Mn மிகுதியாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பிரதம கணக்காளர் கொடுப்பனவுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் ஆனால் நிதி கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார். அதற்கு பதிலளித்த செயலாளர் அவர்கள் கோரிக்கை கிடைத்தவுடன் நிதி விடுவிக்கப்படும் எனத் தெரிவித்தார்.இது தொடர்பாக உரியவர்களுடன் கதைப்பதாக செயலாளர் அவர்கள் உறுதியளித்தார்.
- ☞ அடுத்து நிர்வாக விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

# பிரச்சினைகள், பிரேரணைகள் தொடர்பான கலந்துரையாடல்.

| இல | கலந்துரையாடப்பட்ட விடயங்கள் | தீர்மானம் | பொறுப்பு |
|---|---|---|---|
| 01. | 2015 ஆம் ஆண்டிற்கான PSDG நிதி தொடர்பாக | இந்த வருடம் PSDG இல் 298Mn கிடைக்கவுள்ளது. ஆனால் இதுவரை 3.87Mn வேலைகளே செய்து முடிக்கப்பட்டுள்ளது. சில வலயக் கல்வி அலுவலகத்தின் அனுமதியின் கீழ் செய்து முடிக்கப்பட வேண்டிய வேலைகளிற்கு இதுவரை கேள்விகள்(Tenders) கோரப்படாதுள்ளது. அதற்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் |
| 02. | ஆசிரியர்களின் பதவியுயர்வு, உள்ளீர்ப்பு தொடர்பாக | ஆசிரியர்களின் பதவியுயர்வு, உள்ளீர்ப்பு தொடர்பில் வினவப்பட்டது. அவற்றினை விரைவாகச் செய்து முடிக்கும்படி செயலாளர் அவர்கள் கேட்டுக்கொண்டார். ஆசிரியர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்(நிர்வாகம்) |
| 03. | ஆசிரியர்களின் சம்பள நிலுவை தொடர்பாக | ஆசிரியர்களின் சம்பள நிலுவை தொடர்பில் 269Mn தேவையென கோரிக்கை வந்துள்ளது. ஆனால் மன்னார் வலயத்திலிருந்து இதுவரை கோரிக்கை கிடைக்கப்பெறவில்லை. அது தொடர்பாக மன்னார் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் (நிர்வாகம்) வினவப்பட்ட பொழுது தான் பொறுப்பெடுத்து இரண்டு மாதகாலம் | வலயக் கல்விப் பணிப்பாளர் (மன்னார்) பிரதிக் கல்விப் பணிப்பாளர்(நிர்வாகம்), மன்னார் வலயம். |

| | | | |
|---|---|---|---|
| | | என்பதனால் அது தொடர்பாக நிர்வாக உத்தியோகத்தரிடம் கூறியதாகத் தெரிவித்தார். ஆசிரியர்களின் சம்பள நிலுவைகள் தொடர்பில் கோரிக்கை வைத்தால் மாத்திரமே நிதி விடுவிக்கப்படுமெனவும் ஆகஸ்ட் மூன்றாம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறும் கௌரவ கல்வி அமைச்சர் கேட்டுக்கொண்டார். | |
| 04. | ஆசிரியர்களின் பதவியுயர்வு தொடர்பாக | ஆசிரியர்களின் பதவியுயர்வு தொடர்பாக கருத்துத் தெரிவித்த மாகாண கல்வித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் ஜுலை 27 ஆந் திகதி கல்வி அமைச்சு இசுறுபாயவிலிருந்து வந்து பதவியுயர்வு தொடர்பான சுற்றுநிருபம் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று நடக்கவிருப்பதனால் அதன் பின்னரே பதவியுயர்வு தொடர்பாக நடவடிக்கை எடுக்கவிருப்பதாக தெரிவித்தார்.ஆசிரிய பதவியுயர்வு தொடர்பாக ஜுலை 27 இற்கு பின்னரே நடவடிக்கை எடுக்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. | |
| 05. | சுயவிபரக்கோவைகளை தரவேற்றம் (Update) செய்யவது தொடர்பாக | சுயவிபரக்கோவைகளை தரவேற்றம் (Update) செய்வது தொடர்பாக சொல்லியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென தெரிவிக்கப்பட்டபொழுது அதற்கு கருத்து தெரிவித்த மாகாண கல்வித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் அநேகமானவர்களின் சுயவிபரக்கோவைகளில் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழை உறுதிப்படுத்தப்படாது பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். எல்லா சுயவிபரக் கோவைகளையும் தரவேற்றம்(Update) செய்யும்படி செயலாளர் கேட்டுக்கொண்டார். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்(நிர்வாகம்) |
| 06. | அழிவடைந்த சுயவிபரக்கோவை தொடர்பாக | அழிவடைந்த சுயவிபரக்கோவை தொடர்பாக ஒரு குழுவினை அமைத்து நடவடிக்கை எடுப்பதற்கு அது தொடர்பான விபரங்களை எமக்கு எழுதும்படி செயலாளர் கேட்டுக்கொண்டார். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்(நிர்வாகம்) |
| 07. | முன்னேற்ற அறிக்கை தொடர்பாக | பிரதிக் கல்விப் பணிப்பாளர்(நிர்வாகம்) அவர்களை ஆகஸ்ட் 3 ஆந் திகதி நிர்வாகம் தொடர்பான முன்னேற்ற அறிக்கையை அனுப்பும்படி கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார். | சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்(நிர்வாகம்) |
| 08. | ஆசிரிய இடமாற்றக் | ஆசிரிய இடமாற்றக் கொள்கை அனைத்து | சகல வலயக் கல்விப் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்கை தொடர்பாக | வலயங்களிற்கும் அனுப்பப்பட்டுள்ளது. 01.01.2016 முதல் அந்த இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக இடமாற்றங்கள் செய்யப்படும். தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அந்த விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும்படி செயலாளர் கேட்டுக்கொண்டார். | பணிப்பாளர்கள்<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்(நிர்வாகம்) |
| 09. | அதிபர்களின் இடமாற்றம் தொடர்பாக | அதிபர்களின் இடமாற்றக் கொள்கைகளும் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது. பின்னர் அமைச்சர் வாரியத்திற்கு சமர்ப்பித்து அனுமதி பெறப்படல் வேண்டும். அதிபர்களின் இடமாற்றத்திற்கு பின்னரான வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளது. இடமாற்றம் வழங்கப்படாத அதிபர்களுக்கு மூன்றாம் தவணை விடுமுறைக்குள் இடமாற்றம் வழங்கப்படும். வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளின் விபரங்களை அனுப்பும்படி செயலாளர் கேட்டுக்கொண்டார். அவர்களிற்கான இடமாற்றம் செப்ரெம்பர் 1 ஆம் திகதி வழங்கப்படும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்(நிர்வாகம்) |
| 10. | இணைந்த சேவைகளை சேர்ந்த அலுவலர்களின் இடமாற்றம் தொடர்பாக | இணைந்தசேவைகளை சேர்ந்த அலுவலர்களின் இடமாற்றம் கோரப்பட்டுள்ளது. அவர்களது இடமாற்ற விண்ணப்பப்படிவங்களை மாகாண பொதுநிர்வாக செயலகத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 11. | மாணவர்களின் வரவு தொடர்பாக | மாணவர்களின் 80% வரவு வீதத்தினை உறுதிப்படுத்தும்படியும் பாடத்திட்டத்தினை முழுமையாக கற்பித்து முடிக்கும்படியும் செயலாளர் அவர்கள் கேட்டுக்கொண்டார். இது தொடர்பாக மேற்பார்வை செய்யும்படி கௌரவ கல்வி அமைச்சர் கேட்டுக்கொண்டார். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 12. | பரீட்சை முகாமைத்துவ சபை தொடர்பாக | பரீட்சை முகாமைத்துவ சபையினை அனைத்து வலயங்களிலும் அமைக்கும்படி சுற்றுநிருபம் அனுப்பப்பட்டுள்ளது. வடமராட்சி வலயத்திலிருந்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மற்றைய வலயங்களும் சபையினை அமைக்கும்படி கேட்டுக்கொண்டார். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |

| | | | |
|---|---|---|---|
| 13. | வகுப்பொன்றில் மாணவ எண்ணிக்கை தொடர்பாக | பாடசாலையில் வகுப்பொன்றில் 30 மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக அனைத்து பாடசாலை அதிபர்களிற்கும் அறிவித்தல் வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 14. | ஆசிரியர்களின் வெளிநாட்டு விடுமுறை தொடர்பாக | ஆசிரியர்களின் வெளிநாட்டு விடுமுறை தொடர்பில் பல ஆசிரியர்கள் வெளிநாடு செல்கின்றனர். பின்னர் காலம் முடிவடைந்த பின்னர் பல மாதங்களின் பின்னர் விடுமுறையை நீடிப்பது தொடர்பாக கோரிக்கை கிடைக்கப்பெறுகின்றது. வெளிநாட்டு விடுமுறைக் காலம் முடிவடைந்த பின்னர் கடமைக்கு சமூகமளிக்காத ஆசிரியருக்கு பதவி வெறிதாக்கல் கடிதம் (VOP) வழங்கப்படல் வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 15. | வகுப்பறை முகாமைத்துவம் (Classroom Management) தொடர்பாக | வகுப்பறை முகாமைத்துவம் (Classroom Management) தொடர்பான இறுவட்டு (DVD) அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அதனை அனைவரும் பயன்படுத்த வேண்டுமென செயலாளர் கேட்டுக்கொண்டார். அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் இது தொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பாடசாலை அதிபர்களிடம் கையளித்தமைக்கான கையொப்பத்தைப் பெற்று அனுப்புதல் வேண்டும். தற்பொழுது ஆசிரியர்களுக்காகவும் இறுவட்டு தயார்ப்படுத்தப்படுகின்றது. | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 16. | LMDU Unit இன் செயற்பாடுகள் தொடர்பாக | LMDU Unit இன் செயற்பாடுகள் தொடர்பான திட்டம் (Scheme) கிடைக்கப்பெற்றுள்ளது. அதனைப் பலப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என செயலாளர் கேட்டுக்கொண்டார். இது தொடர்பாக 186 பாடசாலைகளில் நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. | |
| 17. | மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கல்வி முகாமைத்துவ தகவல் தொழிநுட்ப முறைமை (EMIS) இணையத்தளம் தொடர்பாக | மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கல்வி முகாமைத்துவ தகவல் தொழிநுட்ப முறைமை (EMIS) இணையத்தளத்தில் அதிபர்,ஆசிரியர்களின் விபரங்களை தரவேற்றம் (Update) செய்வதற்கு ஒவ்வொரு வலய பிரதிக் கல்விப் | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்.<br>சகல வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்(திட்டமிடல், நிர்வாகம்)<br>சகல வலய கணக்காளர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | பணிப்பாளர்(நிர்வாகம்), பிரதிக் கல்விப் பணிப்பாளர்(திட்டமிடல்), கணக்காளர் ஆகியோர் இணைந்து தரவேற்றம் செய்தல் வேண்டுமென கேட்டுக்கொண்டனர். இது தொடர்பான தகவல்களை திரட்டி பிரதிக் கல்விப் பணிப்பாளர்(திட்டமிடல்) மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. செப்ரெம்பர் மாதம் இணையத்தில் நிதி தொடர்பான சகல செலவினங்களையும் இற்றைப்படுத்தி பார்க்கக்கூடியதாக இருத்தல் வேண்டுமென செயலாளர் தெரிவித்தார். | |
| 18. | மும்மொழி கற்கை நிலையம்(Trilinugal), PICTEC, PESC, STEPS தொடர்பாக | மும்மொழி கற்கை நிலையம்(Trilinugal), PICTEC, PESC, STEPS தொடர்பான முகாமைத்துவ திட்டங்கள்(Management Scheme) மாகாண அமைச்சர் வாரியத்தால் அனுமதித்து கௌரவ ஆளுநரின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் மும்மொழி நிலையம் மிக சிறப்பாக இயங்குவதாக செயலாளர் அவர்கள் தெரிவித்தார். PICTEC நிலையம் இன்னும் சிறப்பாக இயங்க முடியும் எனத் தெரிவித்த செயலாளர் நிலைய முகாமையாளர்கள் கவனமெடுத்து செயற்படுத்த வேண்டும். முகாமைத்துவ திட்டங்கள் (Management Scheme) அனுமதித்து வழங்கப்பட்டுள்ளது. அதன்படி செயற்படுவதற்கு முகாமையாளர்கள் கவனமெடுத்தல் வேண்டும். இதனை நாம் பிரயோசனப்படுத்த வேண்டும் என செயலாளர் தெரிவித்தார். | நிலைய முகாமையாளர்கள் |
| 19. | விசேட கல்வி தொடர்பாக | விசேட கல்வி தொடர்பாக தேவையான உபகரணங்களை வழங்குவதற்கு ஏதுவாக தகவல்களை கேட்டுள்ளோம். அது தொடர்பான தகவல்களை மாகாண கல்வி அமைச்சின் கணக்குக் கிளைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 20. | முறைசாரக் கல்வி தொடர்பாக | முறைசாரக் கல்வி தொடர்பான செயற்பாடுகள் சில இடங்களில் நடைபெறவில்லை. இதற்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு ஏற்ப நான்கு மாத பயிற்சி நெறியையே மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. | |
| 21. | சமூக உளநலன் (Social Welfare) தொடர்பாக | சமூக உளநலன் (Social Welfare) தொடர்பாக பயிற்சிநெறி ஒன்று நடைபெறவுள்ளது. LMDU இற்கு ஊடாக | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | நடைபெறவுள்ளது. இது தொடர்பான திட்டத்தினை எடுத்து தருமாறு செயலாளர் கேட்டுக்கொண்டார். | |
| 22. | கலாநிதி.தாரா டி மெல் உடைய சுற்றறிக்கை தொடர்பாக | கலாநிதி.தாரா டி மெல் உடைய சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதனை அனைத்து ஆசிரியர்களிற்கும் கையளித்து பெற்றுக்கொண்டமைக்கான கடிதத்தினை பெற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அனுப்பி வைத்தல் வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 23. | விழுமியக்கல்வி தொடர்பாக | விழுமியக்கல்வி தொடர்பான புத்தகம் அனைவருக்கும் தரப்பட்டுள்ளது. அதனை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என கண்காணித்தல் வேண்டும். போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக நடைபெற்ற விழிப்புணர்வு தொடர்பான அறிக்கை பிரதம செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. விழுமியக்கல்வியை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இது தொடர்பாக அறிக்கையினை நடைமுறைப்படுத்த முடியும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 24. | கல்வி அபிவிருத்தி மாநாட்டு அறிக்கையினை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக | கல்வி அபிவிருத்தி மாநாட்டு அறிக்கையினை அனைத்து பாடசாலைகளுக்கும் கையளித்தல் வேண்டும். சிபாரிசுகளை கண்காணிப்பதற்கும் அமுல்ப்படுத்துவதற்குமான குழு (RIMP) அனைத்து பாடசாலைகளுக்கும் சமுகமளித்து இது தொடர்பாக மேற்பார்வை செய்யும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>பாடசாலை அதிபர்கள் |
| 25. | பாடசாலை சீருடை தொடர்பாக | பாடசாலை சீருடை தொடர்பாக பின்தங்கிய பாடசாலைகளுக்கு சீருடை வழங்குதல் தொடர்பான விபரங்கள் (வவுனியா தெற்கு சிங்கள் மொழிமூல பாடசாலைகள்) கல்வி இராஜாங்க அமைச்சரினால் கோரப்பட்டுள்ளது. அது தொடர்பான விபரங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. | |
| 26. | மாணவர் ஆரோக்கிய மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்பாக | மாணவர் ஆரோக்கிய மேம்பாட்டுத் திட்டங்களை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தல் தொடர்பான அறிக்கை தரப்படவேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>பாடசாலை அதிபர்கள் |
| 27. | ஆசிரிய வள நிலையங்கள் தொடர்பாக | ஆசிரிய வள நிலையங்கள் தொடர்பாக புதிய ஆசிரிய பிரமாணக் குறிப்பின் படி (Service | |

| | | | |
|---|---|---|---|
| | | Minutes) ஆசிரியர்களிற்கு பயிற்சி ஆசிரிய வள நிலையங்கள் மூலம் வழங்கப்பட வேண்டும். மத்திய கல்வி அமைச்சினால் ஜுலை 30 ஆந் திகதி ஆசிரியவள நிலைய முகாமையாளர்களிற்கான கருத்தரங்கு ஒன்று நடத்தப்படவுள்ளது. அதன் பின்பு ஆகஸ்ட் 3 ஆந் திகதி தொடக்கம் 6 ஆந் திகதி வரை முதலாவது பயிற்சி (Modules) ஆசிரிய வள நிலையங்களில் நடத்தப்படவுள்ளது. அதற்குரிய வளவாளர்களாக தேசிய கல்வியற் கல்லூரி விரிவுரையாளர்களையும் கல்விப் புலம் சார்ந்தவர்களையும் கொண்டு நடத்தப்படவுள்ளது. அதில் முதலாவதாக ஆசிரிய தரம் 3-I ஐச் சேர்ந்தவர்களிற்கு நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. வட மாகாணத்தில் மொத்தம் 14 ஆசிரிய வள நிலையங்கள் காணப்படுகின்றது. | |
| 28. | குடிநீர் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாக | ICRC இனால் பாடசாலைகளுக்கு குடிநீர் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாக எம்முடன் தொடர்பு கொண்டுள்ளார்கள். அது தொடர்பான விபரங்கள் கோரப்பட்டுள்ளது. அதனை உடனடியாக எமக்கு அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 29. | மன்னார் மாவட்டத்தில் UN-habitant இனால் ஐந்து பாடசாலைகளில் பாடசாலைக் கட்டடங்களும் விடுதிகளும் கட்டுவது தொடர்பாக | மன்னார் மாவட்டத்தில் UN-habitant இனால் ஐந்து பாடசாலைகளில் பாடசாலைக் கட்டடங்களும் விடுதிகளும் கட்டுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. சில முக்கியமான பாடசாலைகளுக்கு கட்டடங்கள் தேவையெனில் அது தொடர்பான விபரங்களை தந்தால் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் பூர்த்தி செய்ய முடியும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |
| 30. | 2016 TSEP வேலைகள் தொடர்பாக | 2016 TSEP வேலைகள் தொடர்பாக ஆகஸ்ட் 14 ஆந் திகதி கூட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது. குறிப்பாக 400Mn வரை கிடைக்கவிருக்கின்றது. கூடுதலாக இரண்டு மாடிக் கட்டிடங்களை கட்ட முடியாது. குறிப்பாக கணனி நிலையங்களிற்கும் தளபாடங்களிற்கும் ஓரிரண்டு வலயங்களிற்கு மட்டும் வாகனத்திற்கும் முன்னுரிமை கொடுக்கலாம். கட்டடங்கள் ஆறு மாதத்திற்குள் அல்லது நான்கு மாதத்திற்குள் முடிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | LMDU ஐ நடைமுறைப்படுத்தக்கூடிய Multi Media, Sound box இல்லாத பாடசாலைகளுக்கு முன்னுரிமை கொடுத்தல் வேண்டும். | |
| 31. | தொழிநுட்ப ஆய்வுகூடங்கள் தொடர்பாக | தொழிநுட்ப ஆய்வுகூடங்கள் திறக்கப்பட்டுள்ளது. திறக்கப்படாத ஆய்வுகூடங்கள் தேர்தலிற்கு பின்னர் திறக்கப்படும். அதனை முழுமையாக பயன்படுத்தப்படுகின்றதா என மேற்பார்வை செய்யப்பட வேண்டும். தொழிநுட்ப பீடங்களிற்காக பல பொருட்கள் வந்துள்ளன. அவை முறையாக பயன்படுத்தப்படாது ஒழுங்கற்ற விதத்தில் காணப்படுகின்னறது. தொழிநுட்ப ஆய்வுகூடங்கள் தொழிற்படுகின்றதா என்பது தொடர்பாக உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்(விஞ்ஞானம்) மேற்பார்வை செய்ய வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>சகல உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்(விஞ்ஞானம்) |
| 32. | கணக்கீட்டு ஐயவினா(Audit Quarry) தொடர்பாக | கணக்கீட்டு ஐயவினா(Audit Query) தொடர்பாக ஐயவினாக்கள் வந்தால் பாராளுமன்ற பொதுக் கணக்குக் குழுவிற்கு செல்ல முன்னர் அதனை சீர் செய்யப்பட வேண்டும். | சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்<br>சகல கணக்காளர்கள் |
| 33. | விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவு தொடர்பாக | விசேட தேவையுடையோருக்கு பாடசாலை அழைத்து செல்ல போக்குவரத்துப் படியாக 750/= வழங்குவது தொடர்பான படிவம் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டுவிட்டது. அதனை பிரதேச செயலகங்களில் சமர்ப்பித்து கொடுப்பனவை பெற முடியும். | உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்(விசேட கல்வி)<br>சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் (விசேட கல்வி) |

இத்துடன் கூட்டம் பிற்பகல் 2.30 மணிக்கு நிறைவு பெற்றது.

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

இ.இரவீந்திரன்
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.